**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 29.04.2020

Accepted: 10.06.2020

Published: 01.07.2020

Citation:
Muthukkutti, A. (2020). Women and Artistic Development During the Later Chola Period. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 123–133.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3406

*Corresponding Author:
muthukutti1975@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Women and Artistic Development During the Later Chola Period

**Dr. A. Muthukkutti**
*Assistant Professor, Department of Post Graduate History*
*Government Arts College (Autonomous), Kumbakonam, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-2789-7298

**Abstract -** Man lived as a savage in ancient times. At that time, man wandered like an animal, not knowing how to make a home and what to wear and what to eat. Then he gradually became civilized and met his needs and got civilized life from animal life. What helped him to become civilized were the various professions in which he learned little by little.

It can be said that the arts are all professions that contribute to the well-being of man. It is these arts that give beauty and pleasure to the human mind. The arts that are considered to be special can be divided into five, namely, architecture, sculpture, painting, music, and epic, and afterwards koothu and dramas are combined into seven. The arts flourished wherever civilized people lived.

We can find evidence in the various temples and palaces that the Chola monks also gave prominence to these arts. During the Chola period women lived freely without any restrictions. During the Sangam era, Viraliyar and Panar continued to develop music and koothu and rejuvenated the society. There is ample evidence that the Cholas followed the arts in worship as well.

**Key Words:** Indian History, History of Tamils, Tamil Kingdom, Chola Dynasty, Dance, Nakkan, Paravai Nangai, Koothukkalai, Song, Sculpture, Cosmetics.

**References**

1. Mayilai.Sini.Vengadasamy, Tamilar Valartha Azhugu Kalaigal, Naam Tamilar Pathipagam, Chennai, 2005, pp. 9-13.
2. Krishnamurthy, R., Sangakkala Cholar Nanayangal, Cornet Publication, Chennai, 2010, P. 3.
3. Vanamamalai, N., Tamilar Varalarum Panpadum, New Century Book House Pvt. Ltd., Chennai, 1966, pp. 20-21.
4. Ibid, Sangakkala Chola Nanayangal, P. 3.
5. Raman, K.V., Cholargal, Book 1, New Century Book House Pvt. Chennai, 2009, P. 4.
6. Sathasiva Bandarathar, T.T., Pirkala Chola Varalaru, Sangapalakai, Salem, 2008, P.1.
7. Ibid, Sangakkala Chola Nanayangal, P. 4.
8. Thirukkural Kudimai 5, Parimalalagar, Text.
9. Yapperumkala Viruthi, P. 229.
10. Manimegalaiyin Pathigam, lines 9-12.
11. The Colas, Vol. II, P. 131.
12. The Palaiyarai area is today located as a small town south of Kumbakonam.
13. Ibid, Pirkala Cholar Varalaru, pp. 6-7.
14. Subramainyan, N., Social and Cultural History of Tamilnadu upto AD 1336, Ennes Publications, Udumalpet, 2005, P. 105.
15. SII, Vol. V, No. 520.
16. Ibid.

17. Kalaikovan, R., Cholar Kala Adalkalai, Alamu Pathipagam, Chennai, 2003, P. 193.
18. Rasamanikkanar, R., Chola Varalaru (all three parts included) Suba Pathipagam, Chennai, 2011, pp. 157 - 158.
19. Neelkanda Shastri, K.A., Cholargal, New Century Book House Pvt. Chennai 2010, pp. 727 - 728.
20. Sathasiva Bandarathar, T.V., Pirkala Cholar Varalaru, Center for Indian Culture, Chennai 2008, pp. 196 - 198.
21. Nadana Kasinathan, Rajarachechuram, Department of Archeology, Government of Tamil Nadu, Chennai 2010, pp. 40-48.
22. Ibid, Cholar kala Adarkalai, pp.198-199.
23. Ibid, , Rajarasechuram P. 41.
24. Rasamanikkanar, M., Chola Varalaru, Pooram Pathipagam, 1985, pp. 195-196.
25. Noboro Karashima Varalatru Pokil Thenaga Samoogam, Chola Kaalam (850-1300), Tamil Nadu Archaeological Society, Thanjavur, 1995, P. 86.
26. Ibid, Rajarasechuram, pp.41-43.
27. Tamil Nadu History Editorial Board, Tamil Nadu History Chola Peruvendar period (First Volume), Director Tamil Development Department, Chennai 1998, pp. 156-157.
28. Sridhar, T.S., (ed) Rajarasan Thunukugal Nooru, Department of Archeology, Government of Tamil Nadu, Chennai 2010, P. 13.
29. Krishnan, K.M. Ulaga Maha Chakravarthi Rajendra Cholan, Novina Offset Printing Company, Chennai 2007, P. 130.
30. Nadana Kasinathan, Rajarachechuram, Government of Tamil Nadu Archaeological Department, Chennai 2010, P.41.
31. Thangavelu, K., Tamilaga Varalatru Varisai 9, Thai Nila Varalaru-1, Amzhtham Pathipagam, Chennai 2008, pp. 210-212.
32. Chandravanan, C., Ganesan, N., Sivanandam, R., Rajarasan Thunukkukal, Department of Archeology, Government of Tamil Nadu, Chennai 2010, P. 33.
33. Kalaikovan, R., Cholar Kala Adarkalai, Alamu Pathipagam, Chennai 2003, pp. 235-236.
34. Sundaresa, V., Vandayar, 30 Kalvithurai, Palaniappa Brothers, Chennai, pp. 34-35.
35. Ibid, Pirkala Cholar Varalaru, P. 478.
36. Sathasiva, T.V. Bandarathar, Pirkala Cholar Varalaru, Indian Cultural Studies Center, Chennai 2008, pp. 89-90.
37. Padmavathi, A., Cholar Kala Samayangal, Kumaran Puthaga Illam, Chennai 2003 P. 90.
38. Balasubramaniam, S. R., Cholar Kalai Pani, Asia Publication House, Bombay pp. 198-199.
39. Tamil Nadu Varalatru Aasiriyar Kulu, Tamil Nadu Cholar Peruvendar Kalam, Director Tamil Development Department Chennai, P. 45.
40. Ibid. P. 345.
41. Seevaga 2436.
42. Thangavelu, K., Tamil Nadu Varalatru Varisai, Thai Nila Varalaru 9, Amilzhtham Pathipagam, Chennai, P. 236.

# பிற்காலச் சோழர்கள் காலத்தில் கலை வளர்ச்சியும் பெண்களும்

*முனைவர் ஆ. முத்துக்குட்டி*
உதவிப் பேராசிரியர், முதுகலை வரலாற்றாய்வியல் துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்

***ஆய்வுச்சுருக்கம்:*** *மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற தொழில்களையும்க் கலைகள் என்று கூறலாம். மனிதனின் மனத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிப்பது கலைகளேயாகும். சிறப்புடையதாகக் கருதப்படும் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை எனக் கலைகளை ஐந்தாகப் பிரித்தும், பின்னர் கூத்துக்கலை, நாடகக்கலை இணைத்து ஏழு எனக் கூறப்பட்டது. நாகரிகம் பெற்ற மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கலைகள் வளர்ச்சி பெற்றது. சோழ வேந்தர்கள் கலைகளுக்கு முக்கியத்துவம் தந்தனர். அதைக் கோயில்களிலும் அரண்மனைகளிலும் காண முடியும். சோழர்கள் காலத்தில் பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். சங்ககாலத்தில் விறலியரும் பாணரும் வளர்த்து வந்த இசையையும், கூத்தையும் தொடர்ந்து வளர்த்து வந்து புதுப்பொலிவூட்டினர். இறை வழிபாட்டிலும், கலைகளைச் சோழர்கள் பின்பற்றியனர்.*

***முக்கியச் சொற்கள்:*** *சோழர்கள், தமிழக வரலாறு, கலைகள், ஆடற்கலை, நக்கன், பரவை நங்கை, கூத்துக் கலை, பாடல் கலை, சிற்பக்கலை, ஒப்பனைக்கலை.*

## முன்னுரை

மனிதன், பழங்காலத்திலே காட்டுமிராண்டியாக வாழ்ந்தான். இருக்க வீடும் உடுக்க உடையும் உண்ண உணவும் உண்டாக்கிக்கொள்ளத் தெரியாமல் அக்காலத்திலே மனிதன், விலங்கு போல அலைந்து திரிந்தான். பிறகு மெல்ல நாகரிகம் அடைந்து தன் தேவைகளைப் பூர்த்திசெய்து நாகரிக வாழ்க்கை பெற்றான். அவன் நாகரிகம் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தவை அவன் சிறிதுசிறிதாகக் கற்றுக்கொண்ட பலவகையான தொழில்கள் ஆகும். மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். பண்டையக் காலத்திலேயே நமது நாட்டிலே அறுபத்துநான்கு கலைகள் இருந்தன என மணிமேகலை முதலிய நூல்கள் கூறுகின்றன. மனிதனின் மனத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிப்பது இக்கலைகளேயாகும். சிறப்புடையதாகக் கருதப்படும் கலைகள் முதலில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என கலைகளை ஐந்தாகப் பிரித்தும், பின்னர் கூத்துக்கலை, நாடகக்கலை இணைத்து ஏழு எனக் கூறக் காணலாம். நாகரிகம் பெற்ற மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கலைகள் வளர்ச்சி பெற்றன.[1] சோழ வேந்தர்களும் இக்கலைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை ஏற்படுத்திய சான்றுகளைப் பலதரப்பட்ட கோயில்களிலும் அரண்மனைகளிலும் காண முடியும். சோழர்கள் காலத்தில் பெண்கள் கட்டுப்பாடுமின்றி, சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். சங்ககாலத்தில் விறலியரும் பாணரும் வளர்த்துவந்த இசையையும், கூத்தையும் தொடர்ந்து வளர்த்துவந்து சமுதாயத்தில் புதுப்பொலிவூட்டினர். இறைவழிபாட்டிலும், கலைகளைச் சோழர்கள் பின்பற்றியதற்கான சான்றுகள் உள்ளன.

### சோழர்கள்

சோழர்கள் தமிழகத்தின் கீழ்ப்பகுதியாகிய சோழமண்டலத்தைத் தொன்றுதொட்டு ஆட்சிப்புரிந்து வந்த அரச மரபினரான தொன்மைப் பழங்குடியினர். இவர்கள் எக்காலத்தில் ஆட்சிபுரியும் உரிமையைப் பெற்றார்கள் எனவும் முதலில் எந்த மன்னர் ஆட்சிபுரிந்தார் எனவும் அறிந்து கொள்ள முடியவில்லை. சோழர்கள் ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு பழங்காலந்தொட்டே வாழ்ந்து வந்த பழங்குடியினர் என்பதை வரலாற்றின் மூலங்களின் வாயிலாக நன்கு தெரிகிறது.[2] இராமாயண, மகாபாரத காலங்களில் அவற்றிற்கு முந்திய நாட்களிலும் சோழர்கள் சிறப்புடன் ஆட்சி செய்தனர் என்பதை ஆதார்த்தால் அறிந்து கொள்ளலாம்.[3] கி.மு. மூன்றாம் நூற்றண்டில் மகதநாட்டில் செங்கோல் செலுத்திய அசோகச் சக்கரவர்த்தி வெளியிட்ட ஆணையை உணர்த்தும் கல்வெட்டுகளிலும் சோழரைப் பற்றியக் குறிப்புகள் உள்ளன. அதேபோல் கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருதப்படும் காத்தியாயனர் சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றித் தனது கல்வெட்டுக்களில் குறிப்பிடுகிறார்.[4] கி.பி. முதலாம் நூற்றாண்டில் தமிழகம் வந்தவர் பெரிப்ளுஷ் (கி.பி. 40-80) எழுதிய வரலாற்றுக் குறிப்பிலும் மற்றும் தாலமியின் வரலாற்றுக் குறிப்பிலும் பண்டைய சோழர்கள் பற்றிய செய்திகள் காணக்கிடைக்கின்றன.[5] தொன்மையும் சிறப்பும் பெற்ற சோழக்குடியினர் வளம் நிறைந்த வான் பொய்ப்பினும் தான் பொய்க்காத காவிரியால் வளம்பெற்றுச் சிறப்பெய்த இடமாகக் கருதப்படும் காவிரி நாடு எனவும், பொன்னி நாடு எனவும் அழைக்கப்பட்ட சோழமண்டலத்தை ஆட்சி புரிந்தனர்.[6]

சோழர்கள் புலிக்கொடியையும், சிறப்புரிமை பூண்ட மாலையான அத்திமாலையை சூடினர் என்றுசங்கஇலக்கியங்கள்எடுத்துக்காட்டுகின்றன.[7] சோழர்களின்சிறப்பினைப்பற்றிநெல்லுடையான் நீர் நாடர்கோ[8] என்ற பாடற்பகுதியும், மேதக்க சோழ வளநாடு சோறுடைத்து[9] என்ற ஔவைபிராட்டியாரது திருவாக்கும் நோக்கத்தக்கதாகும். சோழர் குடியினர் சூரிய குலத்தினர் என்பது சங்கத்துச் சான்றோர்கள்கருத்தாகும்.[10] இச்செய்தியைச் சோழர்களின் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. இவர்கள் வலிமை குன்றிய காலத்தில் குறுநிலமன்னர்களாக உறையூர் மற்றும் காவிரிப்பூம்பட்டினம் தலைநகராக கொண்டு ஆண்டனர். ஆனால் சான்றில்லை என்று சிலரும், சிலகாலம் கோனாட்டின்தலைநகராகிய கொடும்பாளூரில் தங்கினர் என்றும், சிலர் சோழர்கள் அருகில் உள்ள உறையூரில் வாழ்ந்தனர் என்றும் கூறுவார்கள்.[11] பின்னர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ நாட்டின் பழையாறை[12] என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு வாழ்ந்தனர். அரண்மனை இருந்த இடம் சோழன்மாளிகை என்றபெயரில்அழைக்கப்படுகிறது.பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த சோழர்களின் இரண்டாவது தலைநகராகப்பழையாறைவிளங்கியது.[13] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் விஜயாலயன் சோழன் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதனைத்தனது கொண்டு ஆட்சிபுரித்தான்.[14] இக்காலங்களில் சோழ மன்னர்களும், பெண்டிர்களும் கலைத்திறனை வளர்ப்பதற்கும் பல்வேறு நடைமுறைகள் மேற்கொண்டார்கள் என்பதைக் கல்வெட்டுக்களின் மூலமும் இலக்கியங்கள் வாயிலாகவும் அறியலாம்.

### ஆடற்கலை

சோழ மன்னர்கள் இசையிலும், நாட்டியத்திலும் சிறந்தோருக்கு வல்லபதியிலார்க்குத் தலைக்கோல் எனும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்துள்ளனர். அப்பட்டம் பெற்ற கணிகையர் தலைக்கோலி என்று அந்நாளில் வழங்கப்பெற்றனர் என்பது பதியிலாள் நக்கன் அரங்கமான செயங்கொண்ட சோழ தலைக்ககோலியும்[15],

நக்கன் பவழக்குன்றான மதுராந்தக தலைக்ககோலியும்[16] என்று கல்வெட்டுக்களால் அறிவதன் மூலம் சோழர்கள் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்று தெரிகிறது. தமிழ்நாட்டளவில் வேறெந்த அரசமரபைக் காட்டிலும், சோழர்கள் காலத்தில்தான் அதிக அளவிலான கல்வெட்டுப் பதிவுகள் நிகழ்ந்தன. இக்கல்வெட்டுகளுள் பெரும்பான்மையானவை ஆவணங்களாக அமைந்தவை என்றாலும், அவை தரும் வரலாற்றுத் தரவுகள் அக்காலத்துச் சமுதாயத்தை அறிந்துக்கொள்ளப் பேருதவி புரிகின்றன. இவை தரும் செய்திகள் மூலம் பிற்காலச் சோழர்களின் காலத்தில் பெண்கள் ஆடற்கலையில் சிறந்து விளங்கினர் என்பதை அறியலாம்.[17]

முதல் இராசராசர் காலத்தில் தஞ்சாவூர் இராசராசீசுவரத்தில் உருவாக்கப்பட்ட தளிச்சசேரிக்கும் சோழ மண்டலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆடற்கலைஞர்கள் நானூறு பேரின் பெயர்கள் தளிச்சசேரிக் கல்வெட்டில் பதிவாகியுள்ளன. அவற்றுள் பன்னிரண்டு பெயர்கள் படிக்கமுடியாத அளவிற்குச் சிதைந்துள்ளன. ஏனைய முந்நூற்று எண்பத்தெட்டு பெண்களின் பெயர்களையும் வகைப்படுத்திய போது ஆடற்பெண்கள் பெயர் சூட்டிக் கொள்ளும் வகைமை பற்றிய பயனுள்ள தரவுகளைப் பெறமுடிந்தது.[18]

## ஆடற்கலை பெண்களின் பெயர்கள்

இலவம், ஒருபனை, முருங்கை, வெண்ணாவல் என்னும் மரப்பெயர்களுடன் இளங்கா என்னும் சோலைப்பெயரும் கொண்டு இந்து பெண்கள் இராசராசீசு வரத்தில் பணியாற்றினர். வெண்ணாவில் திரு ஆணைக்காக தலத்தின் தலமரமாகும். தலமரங்களுள் பதிகச் சிறப்புப் பெற்றவை மிகச் சிலவே. அவற்றுள் வெண்ணாவல் சிறப்புக்குரியது. அதைப் பற்றி திருஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ளார்.

மன்றமுடையாள், மழலைச் சிலம்பு, எடுத்தபாதம், ஆடல் அழகி, சீருடைக்கழல், தில்லைக்கூத்து, அம்பலக்கூத்தி, கூத்தாடி, பாஞ்சாடி என்று ஆடலுடன் தொடர்புடைய பெயர்களை உடையவர்களாய் சில பெண்கள் இருந்தனர். இப்பெயர்களுள் மழலைச்சிலம்பும், எடுத்தபாதமும் திருமுறைப் புகழப்பெற்றவை. அப்பரடிகளாலும், திருவாலியமுதனாராலும் போற்றப்படும் சிவபெருமானின் ஆடல் திருப்பாதமே எடுத்தபாதமாக்கும். ஆடவெடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே என்று திருவாலியமுதனார் என்ற அடியார் குறிப்பார். அப்பரின் எடுத்திட்ட பாதம், அமுதனாரிடம் எடுத்த பாதமாய் சுருக்கியது. இந்த சொல்லாட்சியையே இராசாசீசு வத்து தளிச்சேரிப் பெண்டுகள் பெயராகக் கொண்டிருந்தமை, திருமுறைகள் அக்காலத்தே பெற்றிருந்த வரவேற்பையும், திருவாலியமுதனார், காலத்தோர் முதல் இராசராசர்க்கு முற்பட்டவர் என்ற உண்மையையும் விலக்கவல்லவை ஆகும்.[19]

பொதுப்பெயர்களில் பொன் என்ற சொல்லை முன்னொட்டாகக் கொண்ட பெயர்களும், வல்லி என்று முடியும் பெயர்களும், சுந்தரி என்று முடியும் பெயர்களும், மாணிக்கம் என்று முடியும் பெயர்களும், தேவி என்று முடியும்பெயர்களும்காணப்படுகின்றன. சோழ அரசியற்பெயர்களுள் செம்பியன்மாதேவி, குந்தவை, லோகமாதேவி, பஞ்ச வன்மாதேவி, சோழமாதேவி, திரிபுவனமாதேவி காமக்கோடி என்னும் பெயரும், முதல் இராசராசரின் மகள்களுள் ஒருவரான மாதேவடிகள் பெயரை சிலர் கொண்டிருந்தனர்.[20] முதலாம் இராசராசரின் கி.பி. 1014ம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்வெட்டு திருவையாற்றிலுள்ள உலோக மாதேவீச்சுரத்தைச் சார்ந்த நக்கன் சேர மங்கை என்பவள் கோயில் பணிக்காக நியமிக்கப்பட்டாள் எனக்கூறுகிறது.[21]

ஆடல் மகளிர்கள் கோயிற்பெயர்களையும், இறைப்பெயர்களையும், ஊர்ப் பெயர்களையும் தங்களது பெயர்களாகக்கொண்டிருந்தனர். இதனைக்கொண்டு சோழர்காலத்தில் அதிக அளவில் பெண்கள் ஆடல் கலையில் சிறந்து விளங்கியதை அறிந்துகொள்ள முடிகிறது.[22]

## தளிச்சேரிப் பெண்கள்

தளிச்சேரிகளில் வாழ்ந்தவர்கள் தளிச்சேரிப் பெண்டுகள் என்று அறியப்பட்டனர். இவர்கள் கோயில் தளிச்சேரிகளிலும், ஊரகத் தளிச்சேரிகளிலும் வாழ்ந்த ஆடற்கலைஞர்களாவர். ஊரகத் தளிச்சேரிகளில் வாழ்ந்தவர்கள் ஊர்விழாக்களிலும், கோயில்களின் சிறப்பு விழாக்களிலும் ஆடல் நிகழ்த்தியவராவர். வாய்ப்புகள் கிடைத்தபோது கோயில் தளிச்சேரிகளுக்கும் குடியேறி அங்குத் தளிப்பெண்டுகளாக வாழ்ந்தனர் என்பதை ராசராசீச்சுரம் உடையார் கோயில் கல்வெட்டால் அறியலாம்.[23]

## நக்கன் என்ற சொல்

கூத்திகள், கூத்துப் பிள்ளைகள், தளித்தேவனார், மக்கள் தேவரடியார், தளியிலார், பதியிலார், தளிச்சேரிப் பெண்டுகள் எனத் தொழில் சார்ந்த பல்வேறு பொதுப் பெயர்களால் அழைக்கப்பட்ட இவர்கள் அனைவருடைய இயற்பெயர்களின் முன் நக்கன் என்ற சொல் ஒட்டியிருந்தது. இச்சொல் சோழர் காலக் கல்வெட்டு களில் பரவலாகக் காணப்பெறுகிறது.[24] நக்கன் என்ற சொல் வடமொழியில் சிவனின் ஒரு பெயரான நக்நா என்ற சொல்லிலிருந்து பிறந்தது. ஆகவே, இச்சொல்லைப் பெயராகக் கொண்டவர்கள் சைவ மதத்தைச் சார்ந்தவர்கள்.[25] இவர்கள் தொடக்ககாலத்தில் கோயிற்பணிக்குத் தங்களை அப்பணித்துக்கொண்ட பெண்களும், ஆடற்பெண்களும் மட்டும் நக்கன் என்று பெயர்களுக்கு முன்னால் சேர்த்து வழங்கினர். நாளடைவில் இறைவனோடு தங்களை ஐக்கியப்படுத்திக்கொண்ட அனைவரும் நக்கன் என்ற சொல்லைப் பயன்படுத்தினர் என்பதையும், அவர்களுக்கு தங்குவதற்கு வீடுகள் ஒதுக்கப்பட்டு அவர்களின் பெயரில் அழைக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது.[26] முதலாம் இராசேந்திரனின் மனைவியருள் ஒருவரான பஞ்சவன்மாதேவி கல்வெட்டுகளில் நக்கன் கருக்கமர்ந்தாளான பஞ்சவன்மாதேவி என்று அழைக்கப்படுகிறாள். சுந்தர சோழருடையதாகக் கருதப்படும் இராசகேசரியின் கல்வெட்டுகள் இரண்டில் சேரமானின் மனைவியார் நக்கன் அக்கா நங்கை என்றறியப்படுகிறார்.[27]

## புத்த விகாரம்

இராசராச தேவர் நாகப்பட்டினத்தில் விஜயம் செய்தபோது, அவரைக் கடாரா நாட்டு மன்னர் சூளாமணி வர்மன், இராசராசனிடம் கொண்ட நட்புக் காரணமாக நாகப்பட்டினத்தில் இராசராச பெரும்பள்ளி என்ற புத்த விகாரத்தைப் பற்றினார். அவனது மகன் விஜயோத்துங்க வர்மரும், அமைச்சர்களும், அதிகாரிகளும் சென்று நாகப்பட்டினத்தில் புத்தவிகாரம் கட்டிமுடித்தனர். எனவே, அவர் அனுமதியும் அளித்ததுடன் புத்த பள்ளிக் கட்டுவற்குரிய நிலத்தையும் தானமாகக் கொடுத்து அந்த பள்ளியின் பராமரிப்பிற்காக 97 வேலி நிலங்களைக் கொண்ட வளமிகுந்த ஆனைமங்கலம் கிராமத்தையே பள்ளிச் சந்தமாக அளித்தார்.[28] இச்செய்தியைக் கல்வெட்டு களின் மூலம் அறிய முடிகிறது.

## பரவை நங்கை

கடார நாட்டு மன்னரைக் கௌரவிக்கும் வகையில் இராசராசதேவர் நாட்டிய நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்தார். அப்பொழுதுதான் நாட்டியப் பேரரசி பரவை நங்கையின் நடன அரங்கேற்றமும் நடந்தது. அப்போது அவள் வீதிவிடங்கல் பெருமானின் அசபா நடனத்தை ஆடிக்காட்டினாள்.நடனத்தைக் கண்டு உள்ளம் மகிழ்ந்த இராசராசதேவர்

தனது முத்துமாலையை அவளுக்குப் பரிசாக அளித்தார். நாட்டியப் பேரரசி பரவை நங்கை அசபா நடனம், தில்லையம்பலக் கூத்தபிரான் போன்ற நடனங்களில் தனிச் சிறப்புப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

பரவை நங்கையின் நாட்டியக் கலையைப் போற்றும்வகையில் இராசேந்திர சோழன் தொண்டை மண்டலத்தில் பரவைபுரம் என்று ஒரு நகரை எடுப்பித்தான். அவ்வூரில் பரவை ஈஸ்வரம் உடைய மகாதேவர் என்ற சிவன் கோயிலையும் பரவையின் பெயரால் எடுப்பித்தான். அவ்வூர் இன்னும் விழுப்புரத்திற்கு வடமேற்கில் பனையவரம் என்று மருவி சிற்றூராகக் காட்சியளிக்கிறது.[29] பிற்கால சோழர்களின் காலத்தில் நடனத்தில் தனிச்சிறப்பு பெற்றிருந்த பெண் ஆடற்கலைஞர்களில் நாட்டியப் பேரரசி பரவை நங்கை முதன்மை யானவராக கருதப்படுகிறாள். இவள் ஆடல்கலைகளில் மட்டுமின்றி பாடல் கலையிலும் சிறப்புப் பெற்றிருந்தாள்.

## ஆடற்பெண்களின் வாழிடம்

தஞ்சாவூர் இராசராசீவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு, அக்கோயிலில் பணியமர்த்தப்பட்ட நானூறு தளிச்சேரி பெண்களுக்கும் தனித்தனியே தலைக்கு ஒரு வீடு தரப்பட்டிருந்ததைத் தெரிவிக்கிறது. இவ்வீடுகள் கோயிலின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் அமைந்திருந்தன.[30] கோயிலின் மேற்குப் பகுதியில் மற்றொரு குடியிருப்பு இருந்தது. இவை ஆடற்பெண்களின் வாழிடங்களாகவும், பயிற்சிக்களங்களாகவும் அமைந்தன. இதுபோன்ற தளிச்சேரிகள் இல்லாதவிடத்து கோயில் சார்ந்த மடை விளாகங்களில் ஆடற்பெண்கள் குடியமர்ந்தனர். தளிச்சேரிகள், திருமடைவிளாகங்கள் இல்லாத நிலையில் கோயில் ஆடற்பெண்களுக்கு அக்கோயில்களின் அருகே மனைகள் தரப்பட்டிருந்தன. திருவண்ணாமலைக் கோயில் தேவரடியார் கூத்தாடும் தேவநாச்சியார் உலகமுழுதுடையாள் கீழைத் தெருவில் உள்ள மனையில் வசித்து வந்தார். காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் பணியாற்றிய பதியிலாரான இருநூறு ஆடற்பெண்களுக்கும் வீடுகள் கட்டித் தரப்பட்டிருந்தன என்பது கல்வெட்டு தரவுகளின் மூலம் அறியப்படுகிறது.[31]

## ஆடற்பெண்களின் ஊதியம்

தஞ்சாவூர் இராசராசீசுவரத்துத் தளிச்சேரிப் பெண்டுகள் ஒவ்வொருவருக்கும் வாழ்வூதியமாக ஆண்டுக்கு நூறு கலம் நெல் தரக்கூடிய ஒரு வேலி நிலம் பங்காக வழங்கப்பட்டிருந்தது. எலவானாசூர் சிவன் கோயிலில் ஆடிப்பாடிய தேவாரடியார்க்கு அரும்புலிப்பாடியான இராசராசமங்கலம் எனும் ஊர் வழங்கப்பட்டிருந்தது.[32] ஆடற்பெண்களின் ஊதியத்திற்காக நிலங்களையும் தானம் வழங்கிய அவர்களின் வாழ்வைக் கண்ணியமாக வாழச் சோழர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளதை எழுத்துப் பொறிப்புகள் தெரிவிக்கின்றன.

## ஆடற்கல்வி

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் சுட்டும் சாந்திக்கூத்து, விநோதக்கூத்து எனும் இருவகை அகக்கூத்துகளுமே சோழர் காலத்தில் ஆடப்பெற்றன. அவ்விரண்டனுள்ளும், சாந்திக்கூத்தே செல்வாக்குப் பெற்று விளங்கியது. சாந்திக்கூத்தின் முதல் பிரிவான சொர்க்கம் பல்லவர் காலத்திலேயே வழக்கத்தில் இருந்தபோதும், சோழர் காலத்தில் தான் சிறப்பான நிலையை எய்தியது. [33]

## கூத்துக்கலை

பிற்காலச் சோழர்களின் காலத்துப் பெண்கள் கூத்துக்கலைகளிலும் சிறந்து விளங்கினார்கள். சாந்திக்கூத்தின் பிற உட்பிரிவுகளான அகமார்க்கம், அவியக்கூத்து, நாடகம் போன்றவற்றிலும் சோழர்காலத்து பெண்கள் தேர்ச்சிப் பெற்றிருந்தனர். இராசராசேசுவர நாடகம், பூம்புலியூர் நாடகம், திருநாடகம்,

வீரணுக்க விஜயம், திருமூலநாயனார், கோவண நாடகம் முதலிய நாடகங்கள் அந்நாளில் நடத்தப்பெற்ற நாடகங்களாகும். சொர்க்கம், அகமார்க்கம், அவிநயக்கூத்து என்பன பெரும்பான்மையும் பெண்களாலேயே நிகழ்த்தப்பெற்றன. இந்நான்கும் உள்ளடக்கிய நிலையிலமைந்த சாந்திக்கூத்து இருபாலராலும் இணையான அளவில் சோழமண்டலத்தின் பல பகுதிகளிலும் பரவலாக ஆடப்பெற்றது. விநோதக்கூத்து சோழர் காலத்தில் ஆடப்பெற்றதெனினும் சாந்திக்கூத்தளவிற்கு அது வரவேற்புப் பெற்றிருக்கவில்லை. விநோதக்கூத்தின் ஆறு பிரிவுகளுள் ஒன்றான குடக்கூத்து தமிழ் நாடெங்கும் பெண்களால் ஆடப்பெற்றதைப் பல கோயில்களில் கிடைத்திருக்கும் சிற்பங்கள் நிறுவுகின்றன.[34]

### பாடல்கலை

ஆடலுக்கு இன்றியமையாதன இசையும், பாடலும், சொர்க்கம் தவிர்த்த ஏனைய அனைத்து ஆடல்களும் பாடல்களுக்கேற்ப ஆடப்பெற்றன. மெய்க்கூத்து அகமார்க்கப் பாடல்களுக்கும், அவிநயக்கூத்து அனைத்துப் பாடல்களுக்கும் என நிகழ, நாடகம், அதற்கென எழுதப்பெற்ற கதையமைப்புகளைக் காட்சிகளாக்கியது. அகமார்க்கம் பாடக் கோயில்களில் பதியிலார்களும், தலைக்கோலியரும் இருந்தனர். இவ்வகைப் பாடல்கள் பல்லவர் காலத்திலேயே பயிலப்பட்டதற்குத் தேவாரப் பதிகங்கள் சான்றாகின்றன. சோழர் காலத்தில் இப்பாடல்களுக்கு ஆடல்கள் நிகழ்ந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகளும், சிற்ப ஓவியச் சான்றுகளும் கிடைத்துள்ளன.[35]

### சிற்பக்கலை

சோழர்காலச் சிற்பக்கலை சிறப்பான மரபை ஏற்படுத்தியுள்ளது. சோழர்கள் தாங்கள் கட்டிய கோயிலின் சுவர்களிலும், மூலைகளிலும், தளங்களிலும் மரபிற்கேற்றவாறு தெய்வ உருவங்களையும், பிற உருவங்களையும் அமைத்திருப்பது சோழர் கலையில் காணும் சிறப்புத் தன்மையாகும். தெய்வ உருவங்கள், அரசன், அரசியர், இளவரசர்கள், இளவரசிகள், கொடையாளர்கள் ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன. கருவறைச் சுவரிலுள்ள சுவர் கம்பங்களில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை, பெரும்பாலும் புராணக் கதைகளில் வரும் உருவங்களைப் பெற்றிருக்கின்றன.[36] விமானச் சுவர்களிலும், அதனை அடுத்தப் பகுதிகளிலும் மூலவரின் அவதார உருவங்கள் படைத்திருப்பது சோழர்காலச் சிற்பக் கலையில் காணும் பொதுவான தன்மையாகும். கருவறையிலும், பக்கவறைகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள சோழர் காலச் செப்புத்திருமேனிகளில் லிங்கோத்பவர் செப்புத் திருமேனி உலகப் புகழ் பெற்றதாகும்.[37] இந்தச் செப்புத் திருமேனிகளுள் சிவபெருமானுடைய பல்வேறு உருவங்களைக்கொண்ட செப்புத் திருமேனிகளே அதிகமாகக் காணப்படுகின்றன. பிற்காலச் சோழர்கள் காலத்தில் பெண்கள் சிற்பக்கலையில் தேர்ச்சிப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

### செம்பியன் மாதேவியின் கலைப்பண்பு

செம்பியன் மாதேவியாரின் காலமே சிற்பக் கலையின் உச்சநிலை என்றும், அக்காலத்தில்தான் ஒப்புயர்வற்ற செப்புத் திருமேனிகள் வார்க்கப்பட்டன என்றும் இக்கலையின் வீச்சு முதல் இராசராசன் காலத்தோடு முற்றுப் பெற்றுவிட்டது என்றும் குறிப்பிடலாம். செம்பியன் மாதேவியின் காலத்தில் கலை உச்ச நிலையை அடைந்தது என்பதை உறுதி செய்தாலும், அச்சீரிய நிலை சோழர் காலம் முழுவதும் தொடர்ந்து இருந்த செய்தி உள்ளங்கொளத்தக்கது.

கோனேரிராசபுரத்து உமாமகேசுவரர் கோயிலிலுள்ள ரிஷிபவாகன தேவர், திரிபுராந்தகர், கணபதி ஆகிய சிலைகளும்,

திருவெண்காட்டிலிருந்து புதைப்பொருளாகக் கிடைத்துள்ள ரிஷபவாகன சிலையும் செம்பியன் மாதேவியின் கலைப்பணியைச் சேர்ந்தவை என அறிய முடிகிறது. செம்பியன் மாதேவி எடுப்பித்த கற்றளிகளில் ஐந்துக்கு மேற்பட்ட தேவகொஷ்டங்களையும், அந்தராளத்தையும் காணலாம். சில கோயில்களில் பழைய கட்டிடத்திலேயே புதிய கொஷ்டங்கள் செதுக்கப்பட்டுச்சிலைகளும் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.[38] எறும்பூர் கிராமம், திருநாமநல்லூர் என்ற ஊர்க் கோயில்களின் கலைப்பாணி வேறுப்பட்டுள்ளது. கலைப்பாணியைக் கூர்ந்து நோக்குமித்து முற்பட்ட சோழர்கள் காலக் கோயில்களின் கலைப்பாணியை ஆதித்தன் கலைப்பாணி, செம்பியன் மாதேவி கலைப்பாணி என்று வகுத்துப் பார்ப்பதால் சிற்பக்கலையின் முக்கியத்துவத்தை உணர முடியும்.

### சிற்பக்கலை வளர்ச்சியில் குந்தவையின் பங்கு

முதல் இராசராச சோழன் தஞ்சை மாநகரில் எடுப்பித்த இராசராசேச்சுரம் என்னும் பெரிய கோயிலில் குந்தவைப் பிராட்டி தன் தந்தை சுந்தரச்சோழன் படிமத்தையும், தாய் வானவன்மாதேவியின் படிமத்தையும் எழுந்தருளுவித்துள்ளாள். குந்தவை பல கோயில்களில் திருப்பணிகளைச் செய்தும், இறைவனுக்கு அழகு வாயிந்த செப்பு திருமேனிகளை உருவாக்கி எதிர்காலத் தோன்றல்களுக்குத் தனது ஆலயப் பணியினை தஞ்சை கோயிலின் மூலம் தெரிவிக்கின்றாள். சோழ மாதேவியின் செப்புத் திருமேனியும், மூன்றாம் குலோத்துங்கனின் இளம் பருவத்துச் சிலையும், கோடியக்கரையில் கோலக முனிவரின் சிலையும் உள்ளன. இங்குள்ள கோயில்கள் அக்காலத்து அரசர், அரசியர் மற்றும் மதிக்கப்பெற்றோர்கள் திருவுருவங்களை நமக்குக் பாதுகாத்து வைத்துள்ளன.[39]

### ஒப்பனைக்கலை

பெண்கள் தங்களை அழகுப்படுத்தக்கூடிய ஒப்பனைக் கலையிலும் வல்லவர்களாக இருந்தனர். பெண்கள் நகைகளையும், ஆடைகளையும், அணிந்ததோடு ஒப்பனை செய்துகொண்டனர். நறுமணம் கலந்த நீரில் குளித்து, கண்ணுக்கு மை தீட்டி, மார்பில் குங்கும குழம்பைத் தடவி, விரல்களிலும், பாதங்களிலும் செம்பஞ்சுக் குழம்பையூட்டி, நறுமணம் புகையூட்டிய மாலைகளை அணிந்து செல்வர். கொண்டையில் மலர்களையும், மலர் வளையங்களையும் அணிவர். கற்பூர மாலை, தீம்புமாலை, பூந்தாமம், மலர்போல் ஒப்பனை செய்த பொன்தட்டுவோலை போன்ற பலவகை மலர் மாலைகளேயன்றி, மலர் போல் ஆக்கப்பெற்ற பொன்மாலைகளையும், பொன் மலர்களையும் பெண்கள் அணிந்தனர்.[40] மணப்பெண்ணுக்கு உடல் முழுவதும் செந்திரம் பூசப்படும். நறுமணம் ஊட்டிய கூந்தலை யானையின் மருப்பினாலான சீப்புகளால் தலை வாரி, பல்வேறு வகையாகச் சோடிப்பார்கள்.[41] தொன்மணிகளில் இழைத்த பொற்றலை வாரிகளும் இருந்தன. இத்தகைய ஒப்பனைகளுக்குப் பின் பெண்கள் உடல் நளினங்களுடன் அழகாகவும், செம்மையாகவும் செழிப்பாகவும் தோற்றமளித்தனர். குறிப்பாகத் தேவரடியார்கள் இக்கலையில் சிறந்து காணப்பட்டனர்.[42]

### முடிவுரை

கோயில் பணிகளில் விடப்பட்ட பெண்கள் தேவரடியார்கள்எனப்பட்டனர். இவர்களைத் தலைக்கோலிகள் தளிச்சேரிப் பெண்கள், பதியிலார், கோயிற்பினாக்கள் என்றெல்லாம் அழைப்பர். கோயிலில் திருவிளக்கிடுவதும், திருமெழுக்கிடுவதும், மலர் தொடுத்தலும், ஆடிப்பாடி இசைப்பதும் போன்ற செயல்கள் பெண்களின் கலைத் தொண்டாகும். ஆகவே சோழர்காலத்தில் கலை வளர்ச்சி புதிய யுகம் படைத்தது என சொல்லலாம். இக்காலத்தில்

பெண்கள் ஆடற்கலையிலும், நாடகம், கூத்து, சிற்பக்கலை, ஒப்பனைக்கலை ஆகியவற்றிலும் தேர்ச்சிப்பெற்று விளங்கினர். அரசப் பெண்களும் பல கலைகளில் ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர் என்பதைப் பல்வேறு கல்வெட்டுகள் மூலமும், இலக்கியங்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

1. மயிலை.சீனி.வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2005, ப. 9 - 13.
2. இரா. கிருஷ்ணமூர்த்தி, சங்ககால சோழர் நாணயங்கள், கார்நெட் பப்ளிகேஷன், சென்னை, 2010, ப.எண். 3.
3. நா. வானமாமலை, தமிழர் வரலாறும், பண்பாடும் , நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1966, ப.எண். 20-21.
4. மேற்படிநூல், சங்ககாலச் சோழர் நாணயங்கள், ப.எண். 3.
5. கே.வி. ராமன், சோழர்கள், புத்தகம் 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ப்ரேவேட் லிமிடெட், சென்னை, 2009, ப.எண். 4.
6. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு, சங்கப்பலகை, சேலம், 2008, ப.எண். 1.
7. மேற்படிநூல், சங்ககாலச் சோழர் நாணயங்கள், ப.எண். 4.
8. திருக்குறள் குடிமை 5, பரிமேலழகர், உரைக்குறிப்பு.
9. யாப்பெரும்கல விருத்தி, ப. எண். 229.
10. மணிமேகலையின் பதிகம், வரிகள் 9-12.
11. கூடனு இணிடுச்ண், ஙணிடு. II, p. 131.
12. பழையாறை பகுதி, இந்நாளில் சிற்றூராக கும்பகோணத்திற்கு தெற்கே அமைந்துள்ளது.
13. மேற்படிநூல், பிற்கால சோழர் வரலாறு, ப.எண். 6-7.
14. N. Subramainyan, Skocial And Cultural History of Tamilnadu upto AD 1336, Ennes Publications, Udumalpet, 2005, p. 105.
15. SII, Vol. V, No. 520.
16. Ibid.
17. இரா.கலைக்கோவன், சோழர் கால ஆடற்கலை, அலமு பதிப்பகம், சென்னை, 2003, ப.எண். 193.
18. மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு (மூன்று பாகங்களும் சேர்ந்தது) சுபா பதிப்பகம், சென்னை 2011, ப.எண். 157 - 158.
19. ஓ.அ. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், நியூ சென்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 2010, ப.எண். 727 - 728.
20. தி. வை. சதாசிவ பண்டாரத்தார் பிற்கால சோழர் வரலாறு, இந்திய பண்பாட்டு ஆய்வு மையம், சென்னை 2008, ப.எண். 196 - 198.
21. நடன. காசிநாதன், ராசராசேச்சுரம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 2010, ப.எண். 40 - 48.
22. மேற்படி, சோழர் கால ஆடற்கலை, ப.எண். 198 - 199.
23. மேற்படி, ராசராசேச்சுரம் ப.எண். 41.
24. மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பூரம் பதிப்பகம், 1985, ப.எண். 195-196.
25. நொபொரு கராஷிமா வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம், சோழர் காலம் (850-1300) தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1995, ப.எண். 86.
26. மேற்படி, ராசராசேச்சுரம் ப.எண். 41-43.
27. தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர் குழு, தமிழ்நாட்டு வரலாறு சோழப்

பெருவேந்தர் காலம் (முதல் தொகுதி) இயக்குநர் தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை 1998, ப.எண். 156-157.

28. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இராசராசன் துணுக்குகள் நூறு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 2010, ப.எண். 13.

29. கு.ம. கிருஷ்ணன், உலக மகா சக்கரவர்த்தி ராஜேந்திர சோழன், நொவினா ஆப்செட் பிரிண்டிங் கம்பெனி, சென்னை 2007, ப.எண். 130.

30. நடன. காசிநாதன், ராசராசேச்சுரம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 2010, ப.எண். 41.

31. கோ. தங்கவேலு, தமிழக வரலாற்று, வரிசை 9, தாய்நில வரலாறு - 1, அமிழ்தம் பதிப்பகம், சென்னை 2008, ப.எண். 210-212.

32. சோ. சந்திரவாணன், நாக.கணேசன், இரா.சிவானந்தம், ராசராசன் துணுக்குகள் 100, தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை 2010, ப.எண். 33.

33. இரா. கலைக்கோவன், சோழர்கால ஆடற்கலை, அலமு பதிப்பகம், சென்னை 2003, ப.எண். 235-236.

34. வை. சுந்தரேச வாண்டையார், 30 கல்வித்துறை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, ப.எண். 34-35.

35. மேற்படி, பிற்கால சோழர் வரலாறு, ப. எண். 478.

36. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு, இந்திய பண்பாட்டு ஆய்வு மையம், சென்னை 2008, ப.எண். 89-90.

37. ஆ. பத்மாவதி, சோழர் கால சமயம், குமரன் புத்தக இல்லம், சென்னை 2003, ப. எண். 90.

38. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப் பாணி, ஆசிய பப்ளி ஹவுஸ், பாம்பே, ப. எண். 198-199.

39. தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர் குழு, தமிழ்நாட்டு வரலாறு சோழர் பெருவேந்தர் காலம், இயக்குநர் தமிழ்வளர்ச்சித்துறை, சென்னை, ப. எண். 45.

40. மேற்படி, தமிழக வரலாறும், மக்களும் பண்பாடும், ப. எண். 345.

41. சீவக 2436.

42. கோ.தங்கவேலு, தமிழக வரலாறு வரிசை 9 தாய்நில வரலாறு 9, அமிழ்தம் பதிப்பகம், சென்னை, ப. எண். 236.